மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***232—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி மற்றும் மதுக்கூர் பேரூராட்சி, மௌலானா குடியிருப்பு பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழர்களுக்கு குல தெய்வம், கழக உடன் பிறப்புகளுக்கு அன்பு தெய்வம், தரணி போற்றும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி, மதுக்கூர் பேரூராட்சி மற்றும் மௌலானா குடியிருப்புப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட மாவட்ட நிருவாகம் குடிசை மாற்று வாரியத்திற்கு போதிய நிலம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மாவட்ட நிருவாகம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், ஏழைக் குடும்பங்களுக்கு மேற்கண்ட பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 5]

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"For the People, by the People, of the People" *என்ற மக்களாட்சி தத்துவத்தைத் தன் உயிர் மூச்சாகக்கொண்டு மக்களுக்காகவே என் தவ வாழ்வு என்ற (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சிந்தனையை முதலில் சொன்ன முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

பார்போற்றும் இப்பேரவையில் எளியவனான எனக்கு இடம் அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது தலைமுறையும் என்றென்றும் நன்றியுடன் இருப்போம் என்பதைத் தெரிவித்து, பட்டுக்கோட்டை தொகுதியிலே அதிக வாக்குகள் அளித்து என்னை வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அங்கே என்ன சத்தம்? இந்த மாதிரியெல்லாம் செய்யாதீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சிங்காநல்லூர் உழவர் சந்தைக்கு அருகில் இருக்கக்கூடிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் பழுதடைந்து, மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் பொது மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த வீடுகளுக்குப் பதிலாக மாற்று வீடுகள் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை துறை ரீதியாக அதிகாரிகளோடு ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகரப் பகுதியில், தூத்துக்குடி-திருநெல்வேலி சாலை விரிவாக்கத்திற்காக ஆக்கிரமிப்பு என்று கூறி, 40 ஆண்டு காலமாக குடியிருந்த ஜெயிலானி காலனி, பத்திநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் மக்களின் குடியிருப்புகள் அகற்றப்பட்டன. நான்கு ஆண்டு காலமாக சாலை விரிவாக்கமும் நடைபெறவில்லை, அந்தக் குடியிருப்புகளில் இருந்த சுமார் 350 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் கட்டித் தரப்படவில்லை. மேற்படி ஜெயிலானி காலனி மக்களுக்கு நிரந்தர வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 350 குடிசைப் பகுதி மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வருகின்ற ஐந்து ஆண்டுகளில் பத்து இலட்சம் வீடுகளைக் கட்டித் தர இருக்கின்றது என்ற ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த திட்டங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியில் இருப்பவர்களுக்கும், அங்கே துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, வீடுகள் வழங்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்*

2016 ஆகஸ்ட் 5]

திரு. எஸ். ரகுபதி: *உலகத் தமிழ் சமுதாயத்தினுடைய நம்பிக்கை பேரொளியாகவும், 89-லே ஆட்சிக்கு வந்தோம், மீண்டும் 89-ஐ கொண்டே ஆட்சிக்கு வர முடியும் என்கிற இராஜதந்திரத்தோடு, இன்றைக்கு அரசியல் களத்திலே வலம் வந்துகொண்டிருக்கிற எங்களுடைய 'நமக்கு நாமே நாயகன்' தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய திருமயம் சட்டப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றியினை தெரிவித்து, திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி மற்றும் அரிமளம் பேரூராட்சிப் பகுதிகளிலே குடிசை வீடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அங்கே அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அரசிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு இருக்கின்ற பயனாளிகளின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, வருங்காலங்களில் துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஒப்புதலோடு, நிதிநிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சபைக்கு மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுப்பதற்கு வழி செய்த என்னுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குத் துணையாக இருந்து, இந்த இயக்கத்தை நடத்தி வருகின்ற எங்களுடைய அன்புத் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரத்தநாடு*

தொகுதியினுடைய பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரத்தநாட்டிலே குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டப்பட்டு, அங்கே சாதாரண ஏழையெளிய மக்களைக் குடியமர்த்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் இவ்வளவு ரூபாய் வாடகை என்று நிர்ணயித்து, வாடகை செலுத்த சொல்லியிருப்பதனால், அந்த ஏழை பெருமக்கள் எல்லாம் மிகவும் சங்கடத்தில் இருக்கின்றனர். அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளில் இருப்பவர்களுடைய வாடகையை, இந்த அரசு தள்ளுபடி செய்து, அவர்களுக்கு இனாமாக அந்த வீடுகளை வழங்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரத்தநாட்டில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகளில் இருப்பவர்களுக்கு வாடகைக் கட்டணத்தை வாங்கக் கூடாது என்று சொன்னார்கள். வாடகையை வாங்குவது எதற்கு என்று சொன்னால், அந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளை maintenance செய்வதற்காக, அதாவது அங்கே பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்காகத்தான் பெறுகிறோம் என்றும், வாடகையாக அல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், ஏழை, எளியோர் வீடு இல்லாத நிலையை தமிழகத்தில் போக்க வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.